**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.784/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 1 |
| Name | : | ஸ்ரீராம், வயது 34 |
| Father Name/Husband Name | : | செல்வராஜ் |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | தலைமை காவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of February 2026.

**(Accused absent. 355 BNSS petition filed and allowed)**

**முதல் விசாரணை**

1 நான் தற்போது மதுவிலக்கு அமலாக்க பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.06.2025 ஆம் தேதி காவல் ஆய்வாளர் அவர்களின் உத்தரவுபடி 12.00 மணிக்கு மதுவிலக்கு சம்பந்தமாக புதிய பேருந்துநிலையத்தில் தலைமை காவலர் 1635 ஜெயபிராகஷ், மு.நி.கா 1022 பால்ராஜ் ஆகிய போலீசார் பார்டி சகிதம் ரோந்து செய்து கண்காணித்து வந்தபோது மேற்படி ஜெயபிரகாஷ் என்பவருக்கு கிடைத்த ரகசிய தவலின் பேரில் கோவில்பட்டி புதுபேருந்து நிலையம் அருகே வரும்போது கையில் வெள்ளை நிற பிளாஸ்டிக் பையை வைத்து கொண்டிருந்த நபரை விசாரிக்க அவர் பெயரை முன்னுக்கு பின் முரணாக கூறினார். பின்பு அவர் பெயர் பாலமுருகன், த.பெ. பரமசிவம், புதுகிராமம், 3 வது தெரு என்று விசாரணையில் கூறினார்.

2 அவர் கையில் வைத்திருந்த வெள்ளை நிற பிளாஸ்டிக் சாக்குப் பையை சோதனை செய்தபோது சுமார் 750 ML அளவு கொண்ட Nicols black and gold french brandy VSOP பாட்டில்கள் 5 எண்ணம் மற்றும் சுமார் 750 ML அளவு கொண்ட Brihans நெப்போலியன் பிராந்தி பாட்டில்கள் 5 எண்ணம் வைத்திருந்தார். அவரிடம் விசாரித்தபோது எதிரி மிலிட்டரி கேண்டினிலிருந்து வாங்கி அரசு அனுமதியின்றி லாப நோக்கத்துடன் மதுபாட்டில்கள் விற்பனை செய்வதாக கூறினார். மேற்படி நபர் அரசு

அனுமதியின்றி சட்டத்திற்கு புறம்பாக லாப நோக்கத்துடன் மதுபாட்டில்களை விற்பனை செய்த குற்றத்திற்காக மேற்படி நபரை நாங்கள் பிடித்தும், அவர் வைத்திருந்த மதுபாட்டில்களை 12.30 மணிக்கு அத்தாட்சி மூலம் கைப்பற்றியும் அந்த அத்தாட்சியில் அந்த இடத்தில் தனிநபர் யாரும் கையொப்பமிட முன்வரததால் போலீசார் பார்டியாகிய நாங்களே கையொப்பம் செய்தோம். மேற்படி சொத்து மற்றும் வழக்கு சொத்துக்களை 13.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து நிலைய குற்ற எண். 68/2025, U/s 4(1)(C)TNP Act ன் படி தலைமை காவலர் ஜெயபிரகாஷ் அவர்கள் வழக்கு பதிவு செய்வதற்கு உதவியாக இருந்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இந்த வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

3 கோவில்பட்டி புதிய பேருந்து நிலையம் என்பது மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். பைபாஸ் ரைடர் பேருந்துகள் அந்த வழியாகதான் செல்லும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் டீக்கடைகள், வாகன காப்பகங்கள் நிறைய உள்ளது. சம்பவ இடத்திலிருந்து தனிநபர்கள் யாரை குறிப்பாக சாட்சியாக அழைத்தீர்கள் என்று அத்தாட்சியில் துலங்காது என்றால் சரிதான், ஆனால் சாட்சியாக அழைத்தற்கு யாரும் முன்வரவில்லை. வெள்ளை நிற சாக்கு பையை அத்தாட்சியில் கைப்பற்றினீர்களா என்றால் கைப்பற்றினோம்.

4 அத்தாட்சியில் எதிரியிடம் கையொப்பம் பெற்றோம். அத்தாட்சியில் கைப்பற்றபட்ட பொருட்கள் மிலிட்டரி கேண்டினில் பெறப்பட்ட மதுவகைகள் என்று எழுதியுள்ளதா என்றால் இல்லை. ரோந்துக்கு ஒரு தலைமை காவலரும், இரண்டு முதல் நிலை காவலரும் சென்றோம். தலைமை காவலருக்கு தன்னிச்சையாக ரோந்து செல்வதற்கு அதிகாரம் கிடையாது என்றால் சரிதான். தலைமை காவலர் ரோந்து செல்வதற்கு நிலைய பொறுப்பு அலுவலர் அனுமதி கடிதம் கொடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது, ஆனால் நாங்கள் ரோந்துக்கு சென்றோம். சம்பவத்தின்போது தலைமை காவலர் அதிகார மீறலில் ஈடுபட்டுள்ளார் என்றால் சரியல்ல.

5 வீட்டிலிருந்த எதிரியை அழைத்து சென்று பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் அத்தாட்சியில் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றபடவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. புள்ளி விவரத்திற்காக உயர் அதிகாரியின் உத்தரவின் பேரில் பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டது

என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் காவல் நிலையத்தில் இருப்பில் உள்ள சான்று பொருட்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.